©
தமிழ்நாடு அரசு
2006

பதிவெண் :

# தேனி மாவட்ட அரசிதழ்

## இணைப்பு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

தேனி , ஜூலை 2006, இணைப்பு – 1

## உள்ளாட்சித் துறை அறிவிக்கை

**போடிநாயக்கனூர் நகராட்சி**

1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 310 ( 2 ) ஆவது பிரிவின்படி
வெளியிடப்படும் அறிவிப்பு

( ந.க.எண் 10407 / 02 / இ2 , நாள் 11 – 7– 2006 )

குடிநீர் விநியோக துணை விதிகள்

**Bodinayakanur Municipality 2006 May, Bodinayakanur Municipality Water Supply, Bye-Laws**

Bye-laws framed under sections 130, 131, 132 and 306 (3)(c), (d), (e), (f), (h) and ( i ) of Tamil Nadu District Municipalities Act, V of 1920 as amended for the grant and control of House service connections will come into force after three months from the date of Publication of these bye - laws - in District Gazette.

### PART - I

1 Every application for the supply of water under sub section ( i ) of section 131 or Section 132 of the Tamil Nadu District Municipalities Act of 1920 as amended shall be in writing signed by the applicant, *i. e.*, owner or occupier of the premises and so far as may be in the form 'A' there into annexe and the work necessary for such supply, shall not be commenced until the applicant has deposited with the Executive Authority the estimated cost as fixed by him on or before the date fixed by him.

**போடிநாயக்கனூர் நகராட்சி 2006 மே, போடிநாயக்கனூர் நகராட்சி குடிதண்ணீர் விநியோக துணை விதிகள்**

வீடுகளுக்கு தண்ணீர் குழாய் இணைப்புகள் கொடுப்பதற்காகவும் அவற்றின் கட்டுப்பாட்டிற்காகவும் திருத்தப்பட்ட 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 130, 131, 132, 306 ( 3 ) ( சி ) ( டி ) ( இ ) (எப் ) ( எச் ) ( ஐ ) பிரிவுகளின்படி கீழுள்ள உபவிதிகள் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்கு பிறகு அமுலுக்கு வரும்.

### உபவிதிகள் பாகம் – 1

1 . 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் திருத்தப்பட்ட சட்டத்தின் 131 ( 1 ) அல்லது 132 பிரிவுகளின்படி குடிதண்ணீர் விநியோகத்திற்காக இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி பாரத்தில் மனுதாரர் அதாவது கட்டிடத்தின் சொந்தக்காரர் அல்லது குடி இருப்பவர்களால் கையொப்பம் செய்து அனுப்பப்பட வேண்டும் . ஆணையர் அவர்களிடம் மதிப்பிடுவதற்கான செலவுத் தொகையை அவர் நிர்ணயிக்கும் தினத்திற்குள் செலுத்துவதற்கு முன் மேற்படி குடிநீர் வழங்கும் வேலையை ஆரம்பிக்கக் கூடாது .

**Note :** a) This will include a centage of 10 percent of the actual cost of work against supervision charges subject to a minimum of Rs. 785/- Provided that in the case of supply to Government buildings the value of the work and supervision charges connected therewith shall not be payable in advance to the Commissioner. But the amount due to this office shall also be remitted with in a week after completion.

b) Every such applications shall be accompanied by the registration fee of Rs. 20/- which is in no case refundable.

c) Towards water supply charges the amount noted below shall be deposited as advance

| | | | |
|---|---|---|---|
| i) | Domestic purpose | Rs. | 3,000/- |
| ii) | Non domestic purpose | Rs. | 7,000/- |
| iii) | Industrial purpose | Rs. | 15,000/- |

This revised rate will apply to the Old and New connections only.

2. Charges for supply of water will be collected at the following rates.

(i) For domestic purpose Rs. 5.00 per 1000 litres part thereof with a minimum of Rs. 50/- **w. e. f. 1. 10. 2006** per month excluding meter rent and maintenance charges.

(ii) For non domestic purpose ( Commerical purpose ) Rs. 15 per 1000 litres or part there of with a minimum of Rs. 150/- per month excluding meter rent and maintenance charges.

(iii) For non domestic purpose ( Industrial purpose ) Rs. 30 per 1000 litres or part there of with a minimum of Rs. 300/- per month excluding meter rent and maintenance charges.

**குறிப்பு:** ஏ) மதிப்பீடுகளுக்கான செலவுத் தொகை என்பது குடிநீர் வழங்கும் வேலைக்காக ஏற்படும் சரியான செலவில் 10 சதவிகிதம் மேற்பார்வை செலவும் சேர்ந்தது ஆகும். குறைந்தபட்சம் ரூ. 785/– ஆகும். அரசு கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு வேலைகளுக்கு வேலைக்கான தொகை மற்றும் மேற்படி வேலையை மேற்பார்வை செய்வதற்கான கட்டணம் ஆகியவற்றை முன் பணமாக செலுத்தவேண்டிய அவசியமில்லை. ஆனால் இத்தொகை வேலை முடிவுற்ற ஒருவார காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும் .

பி ) அவ்வாறு வரும் ஒவ்வொரு விண்ணபத் துடனும் பதிவு தொகை ரூ. 20 செலுத்த வேண்டும். மேற்படி தொகை எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

சி) தண்ணீர் கட்டணத்திற்காக கீழே கண்டபடி வைப்புத்தொகை முன் பணமாக செலுத்தப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1) | வீட்டு உபயோக இணைப்புகள் | ரூ. | 3,000/– |
| 2) | வணிக தொழிலக இணைப்புகள் | ரூ. | 7,000/– |
| 3) | தொழிற்சாலை இணைப்புகள் | ரூ. | 15,000/– |

இந்த வைப்புத் தொகை பழைய இணைப்புகள் மற்றும் புதிதாகவழங்கப்படும் குழாய் இணைப்புகளுக்கும் பொருந்தும்.

2. தண்ணீர் விநியோகத்திற்கான கட்டணம் கீழ்க்கண்ட வீதத்தில் இருக்கும்

i ) வீட்டு உபயோக காரியங்களுக்கு செலவாகும் தண்ணீருக்கு ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அல்லது அதற்குட்பட்டதற்கும் ரூ. 5/– வீதம் கணக்கிட்டு, குறைந்த பட்சம் மாதம் ஒன்றிற்கும் அல்லது அதன் பாகத்திற்கும் ரூ. 50/– வீதம் 1. 10. 2006 முதல் வசூலிக்கப்படும் ( மீட்டர் கட்டணம் மற்றும் பராமரிப்பு கட்டணம் நீங்கலாக )

ii ) வீட்டு உபயோகமில்லாத காரியங்களுக்கு ( வணிக உபயோகத்திற்கு ) விநியோகிக்கப்படும் தண்ணீர் பயன்படுத்தப்பட்டால் ஒவ்வொரு 1000 லிட்டர்கள் அல்லது அதன் பாகத்திற்கும் ரூ. 15 வீதம் ஒரு மாதத்திற்கும் அதன் பாகத்திற்கும் குறைந்தபட்ச கட்டணமாக ( மீட்டர் வாடகை மற்றும் பராமரிப்பு கட்டணம் நீங்கலாக ) ரூ. 150/– வசூலிக்கப்படும்.

iii ) தொழிற்சாலை உபயோக காரியங்களுக்கு ( தொழிற்சாலை உபயோகத்திற்கு ) விநியோகிக்கப்படும் தண்ணீர் பயன்படுத்தப் பட்டால் ஒவ்வொரு 1000 லிட்டர்கள் அல்லது அதன் பாகத்திற்கும் ரூ. 30/– வீதம் ஒரு மாதத்திற்கும் அதன் பாகத்திற்கும் குறைந்தபட்ச கட்டணமாக ( மீட்டர் வாடகை மற்றும் பராமரிப்பு கட்டணம் நீங்கலாக ) ரூ. 300/– வசூலிக்கப்படும்.

3 Supply of water to all house service connection shall be on metered system only for premises where water would be drawn for purely house hold purposes the charge will be at domestic rates specified in bye-law 2 (i) *infra*. But if the Executive Authority has reasons to belief that in any case water supplied under this rate is used or is likely to be used for other than domestic purpose he may require the owner or the occupier to pay non-domestic rate for the service connection specified in bye law No. 2 (ii) *infra* and in default order for cutting off the supply as per the bye-law.

3. நகராட்சி மன்றத்திலுள்ள எல்லா வீட்டு இணைப்புகளுக்கும் மீட்டர் இணைப்பு முறையில்தான் அனுமதிக்கப்படும். வீட்டு உபயோகத்திற்கு மட்டும் தண்ணீர் உபயோகப்படுத்தும் இணைப்புகளுக்குப் பின் சொல்லப்பட்டிருக்கும் உபவிதி எண் 2(i) இன் படி கட்டணத் தொகை விதிக்கப்படும். ஆனால் இந்த முறையில் அனுமதிக்கப்பட்ட இணைப்பிலிருந்து வீட்டு உபயோகமில்லாத இதர காரியங்களுக்கு தண்ணீரை உபயோகப்படுத்துவதற்கு உண்டான வாய்ப்பு இருப்பதாக ஆணையாளர் கருதினாலோ ஷெ இணைப்பின் சொந்தக்காரரையோ குடியிருப்பவரையோ பின் சொல்லப்பட்டிருக்கும் உபவிதி 2 (ii) இல் கண்டபடி வீட்டுக்காரியம் அல்லாத இதர காரியங்களுக்கான கட்டணத் தொகை கட்டும்படியாக ஆணையாளர் கோரலாம். அதன்படி செலுத்தத் தவறினால் இணைப்புகள் துண்டிக்கப்படும்.

3 ( a ) The nature of supply to any premises ( *i.e* ) whether Domestic or Non-domestic shall be determined by the Council with reference to the explanation under section by 131 ( 3 ) of the Tamil Nadu District Municipalities Act, 1920 as amended.

3. (எ) வீட்டிணைப்புக் குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்படும் தண்ணீர் வீட்டு உபயோகத்திற்கானதா அல்லது வீட்டு உபயோகத்திற்கு அல்லாததா என்பது திருத்தப்பட்ட 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் பிரிவு 131 ( 3 ) இன் கீழேயுள்ள விளக்கத்திற்கு ஏற்ப தீர்மானிக்கப்படும்.

(b) No free allowance will be allowed for both domestic and non-domestic purpose.

3 (பி) வீட்டு உபயோக இணைப்பானாலும், வீட்டு உபயோகமல்லாத காரியங்களுக்கான இணைப்பானாலும் இலவச தண்ணீர் எடுத்துக்கொள்ள அனுமதி கிடையாது.

4 Service connection to institutions owned, controlled and managed by the Municipal Council shall be on tap rate basis and will be charged at the rate specified in bye-law 2 ( iii ) for domestic and non domestic supplies as the case may be in all such cases Flow Control Valve will be fixed and the flow of water throttled at the ferrule to give a discharge of not more than five litres per minute per tap during the hours of minimum demand.

4 நகராட்சிக்கு சம்மந்தப்பட்ட சொந்தமான அல்லது அதிகாரத்திற்குட்பட்ட கட்டிடங்களுக்கு குடிநீர் வழங்கும் வசதிசெய்தால் உபவிதி 2 (iii) ல் கண்டுள்ளவாறு கட்டணம் வசூலிக்கப்படும். இவைகளுக்கு 'ப்ளோ கண்ட்ரோல் வால்வ்' பொருத்தப்பட்டு தேவை குறைந்த காலத்தில் ஒரு நிமிடத்திற்கு ஐந்து லிட்டருக்கு மேற்படாத அளவில் விநியோகிக்கப்படும்.

(a) In the case of house connection to Market, Milk Dairy and Conservancy Depots where water is used for both domestic and non domestic purposes the supply to the extend of 250 litres shall be considered as drawn for domestic purposes and the water consumed in excess as used for non-domestic purposes and charged at the rates specified there for under bye-laws 3 (b).

(எ) சந்தைகள், பால்பண்ணைகள், கால்நடை பண்ணைகள் ஆகியவற்றிற்கான இணைப்புகளில் வீட்டு உபயோகத்திற்கும், வீட்டு உபயோகமல்லாத பிற காரியங்களுக்கும் பயன்படுத்துவதால் உபயோக படுத்தப்படும் தண்ணீரில் நாளொன்றுக்கு 250 லிட்டர்கள் வரை வீட்டு உபயோகத்திற்காக பயன்பட்டதாக கருதியும் அதற்குமேல் செலவான தண்ணீரை வணிக காரியங்களுக்கு பயன்படுத்தியதாக கருதியும் துணை விதிகள் 3 ( பி ) இல் குறிப்பிட்டவாறு கணக்கிட்டு தண்ணீர் கட்டணம் வசூலிக்கப்படும்.

5 Every house service to which water supply pipe is laid on shall be provided with only one service pipe connection and controlled by a stopcock and Flow Control Valve. No house shall be supplied with water from the existing or prospective service connection of any adjoining house or premises.

5. ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர்குழாய் அமைப்பு ஸ்டாப்காக், ப்ளோ கண்ட்ரோல் வால்வ் முதலியவைகளினால் கட்டுப்படுத்தப்பட்டு விநியோகக் குழாயிலிருந்து ஒரு குடிநீர் குழாய் மட்டும் அமைப்பு கொடுக்கப்பட்டும் அருகில் உள்ள குடிநீர் அமைப்பு வசதி உள்ள அல்லது கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வீடுகளிலிருந்தோ, கட்டிடங்களிலிருந்தோ குடிநீர் அமைப்பு வசதி எந்த அடுத்துள்ள வீடுகளுக்கும் இடங்களுக்கும் தரப்படமாட்டாது.

6 (a) Subject to these bye laws the dia and the character of service and communication pipes and the number, size and kind of stop cocks or taps shall be in each case be determined by the Commissioner having regard to the pressure available at the point off take at the main and the distance of the premises to be served from the main for all service connection ( Half inch ) 15 mm pipe shall be laid, for distance below 100feet ( 30m ) ( three fourth inch ) 20mm pipes in other cases in every case for distance below 30meters the diameter of the bore in the water main shall be ( One fourth inch ) 5mm less than that of the dia service pipes except in the case of (1/2" ) 15mm Service pipes the dia of the bore shall be (3/4" ) providing that in the case where the diameter of the bore so arrived is not equal to the flow control valve of the bore shall be fixed at the immediate next standard size of flow control valve available the flow of water will be throttled at the flow control valve to give a discharges of not more than five litres per minute per tap during the hours of minimum demand of all service connections. All tapes in house services shall be of screw down pattern of tested quality are any type approved by the Superintending Engineer TWAD Board Madurai and size shall not exceed ( 1/2"inch ) 15mm.

6. (எ) ஒவ்வொரு வீட்டிற்கும் அருகிலுள்ள விநியோகக் குழாயிலிருந்து மட்டும் இணைப்பு வழங்கப்படும் விநியோகக் குழாயிலிருந்து குழாய் அமைக்குமிடங்களின் தூரத்தையும் நீர் எடுக்கப்படவேண்டிய இடத்திலுள்ள அழுத்தத்தையும் அனுசரித்து நீரை எடுத்துச் செல்லும் குழாய்களின் விட்டம் , எண்ணிக்கை அளவு தண்ணீர் குழாய்களின் விதம் முதலியவைகள் ஒவ்வொரு அமைப்பிலும் ஆணையாளர் இத்துணை விதிகளுக்கு கட்டுப்பட்டு முடிவு செய்யவேண்டும். குழாய் அமைக்கும் இடங்கள் 100 அடிக்கு ( 30 மீட்டருக்கு ) குறைவாக இருந்தால் 15 மி.மீ ( 1/2" ) குழாய்களும் மற்ற இடங்களுக்கு 20 மி.மீ ( 3/4" ) குழாய்களும் பொருத்த வேண்டும். எல்லா அமைப்பிற்கும் தண்ணீர் எடுக்கப்படும் மூல குழாயில் செய்யப்படும் துவாரம் மேற்படி வீடுகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் குழாயின் விட்டத்தில் 5 மி.மீ ( 1/4" ) குறைவாகவும் இருக்கவேண்டும். மேற்படி கணக்கின்படி ப்ளோ கண்ட்ரோல் வால்வ் இணைப்புகளில் நிமிடத்திற்கு 5 லிட்டர் தண்ணீருக்கு மேற்படாமல் குறைந்த தேவை நேரங்களில் வருகிற அளவில் ப்ளோ கண்ட்ரோல் வால்வ் அமைத்து தண்ணீரை விட ஏற்பாடு செய்யலாம். குழாய் இணைப்பு வழங்கப்படும் சமயத்தில் விநியோகக் குழாயிலிருந்து இணைப்புக் குழாய் பொருத்தும் வேலை ஆணையாளர், பொறியாளர் அல்லது நீர்ப்பணி மேற்பார்வையாளர் முன்னிலையில் நடைபெற வேண்டும். தண்ணீர் குழாய்கள் பரிசோதிக்கப்பட்ட ப்ளோ கண்ட்ரோல் வால்வ் இருக்கவேண்டும்.

(b) Provided in the cases where either dia of the service pipe exceeds ( 3/4") 20mm or the length of service pipe exceeds 90 meters ( 300 feet ) that the determined by and approved by the Superintending Engineer.

(பி) வீட்டிணைப்புக் குழாயின் விட்டம் ( 3/4" ) 20 மி.மீ . க்கு மேலானாலும் அல்லது அதன் நீளம் ( 300' ) 90 மீட்டருக்கு மேலானாலும் நகராட்சி நிர்வாக கண்காணிப்பு பொறியாளர் அவர்களின் அங்கீகாரம் பெற வேண்டும்.

6. (c) All taps fittings etc., of a house service connection shall be so fixed so as to afford facility for easy inspection by the Municipal Authorities. Every house owner or occupier shall afford all facilities for such inspection, on paining of water supply being out off where residence if offered.

(சி) குடிநீர்குழாய் அமைப்பு பெற்ற ஒவ்வொரு வீட்டின் குழாய்களும் நகராட்சி அதிகாரிகளால் சிப்பந்திகளால் சுலபமாக அடிக்கடி பார்வை செய்ய தக்க முறையில் அமைக்கவேண்டும். குடிநீர் வழங்கும் வகையில் மேற்படி சிப்பந்திகளால் பரிசோதனை செய்வதற்கு ஒவ்வொரு கட்டிடத்தின் சொந்தகாரரும் அல்லது அதன் குடியிருப்புக்காரரும் எல்லாவிதமான வசதிகளையும் செய்யவேண்டும். தடை செய்தால் குடிநீர்வழங்குதல் துண்டிக்கப்பட்டு நிறுத்திவிடப்படும்.

(d) No tape of any service connection shall be allowed in such position as to render it liable to become submerged in water issuing from it or in a position where the spill or wash water cannot be discharged by gravitation to the nearest Municipal ditch or drain.

(டி) எந்தக் குழாயும் அதிலிருந்துவரும் தண்ணீருக்குள் மூழ்கியிருக்கும் படியாவது அல்லது தண்ணீர் தானாக நகராட்சி கழிவு நீர் வடிகாலில் சேர முடியாதபடியாவது வைக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

e) The risks of inlets to water tanks in premises and public cattle watering troughs getting submerged and allowing back syphonage should be eliminated completely by provided ever flow below the level of the inlet even they are fitted with ball valves.

(இ) தண்ணீர் தொட்டிகளிலும் பொதுக்கால்நடை தொட்டிகளிலும் இணைக்கப்பெற்ற உள் குழாய்கள் வழியாக தண்ணீர் உயர்வினால் மிதந்து எதிர்த்து செல்லாதபடி தடுக்க மேற்படி உட்குழாய்களுக்கு கீழ் மட்டமாகவே தண்ணீர் வெளியேற வழி அமைக்கப்பட வேண்டும். பந்து தடுப்புகளிலிருப்பினும் இம்முறையை செய்ய வேண்டும்.

f) Whenever a service pipe is laid across a sewer open drain privy or in any other place where in the opinion of the Commissioner it is liable to be damaged or to cause contamination of water such pipes shall be passed through an iron pipe of such length, diameter and thickness as the Commissioner may approve and the pipe shall be laid at such a level as the Commissioner may direct.

(எப்) சர்வீஸ் பைப், சாக்கடை லயன், திறந்த சாக்கடை, கக்கூஸ் மற்றும் தண்ணீர் குழாய் கெட்டு தண்ணீர் கெடுவதற்கு சூழ்நிலை உள்ள இதர இடங்கள் ஆகியவற்றை கடக்க நேரும் போது மேற்படி பைப் அதைவிட பெரிய குறுக்களவு கொண்ட குழாயிலும் செலுத்திக் கொண்டு செல்லப்பட வேண்டும். மேற்படி கவரிங் பைப்புகள் நீளம், குறுக்களவு, கனம் ஆகியவையும் அவைகள் பதிக்கப்பட வேண்டிய மட்டமும் ஆணையாளர் அங்கீகரிக்கும் முறையில் அமைய வேண்டும்.

g) It shall be the duty of the owner or occupier of the premises to bring to the notice of the Municipal Authorities without delay any defects or leaks noticed in the service connection pipe or tap or other fittings connected with it.

(ஜி) குழாய் இணைப்புகளில் ஏற்படக்கூடிய குறைபாடுகளையோ அல்லது ஒழுகல்களையோ வீட்டின் சொந்தக்காரரே அவைகளைக் கண்டவுடன் தாமதமில்லாமல் நகராட்சி அதிகாரிகளுக்குத் தெரிவித்து விட வேண்டும்.

h) The owner or occupier shall not fix any hand pump or Motor to draw water either directly or indirectly.

(எச்) குழாய் இணைப்புகளில் எந்தவிதமான கையிறைப்பானோ விசை இறைப்பானோ நேரடியாகவோ மறைமுகமாகவோ பொருத்தக்கூடாது.

7 a) The supply of water to mosques, temples and churches shall be only for drinking purposes and shall be regulated as per Bye-law 3 ( b ) ( i )

7. (எ) மசூதிகள், கோவில்கள், கிறிஸ்துவ ஆலயங்கள் இவற்றிற்கு விநியோகம் செய்யப்படும் தண்ணீருக்கு உபவிதி 3 (பி) (i) இல் உள்ள வீட்டு உபயோகத்திற்கான அடிப்படையில் கட்டணம் விதிக்கப்படும்.

7\. b) The Municipal council shall have the right in its discretion to refuse the concession to the institution that are not much frequented.

c) The Management of institution shall pay all the charges in the installation of taps and in their maintenance or in the removal of them and the taps shall be 15mm ( 1/2" ) waste not self closing type only 15mm ( 1/2" ) service pipes shall be laid for distance below 30 meters ( 100ft. ) and 20mm (3/4") pipes in other case, upto a distance or 90 meters ( 300ft ). The flow of water will be throttled to give a discharge of not more than 5 litres during the hours of minimum demand.

d) If the water supplies is found wasted or misused, the connection is liable to be withdrawn.

e) If at any time the taps are leaky or mishandled, Defeating automatic action the tap shall be closed by the Commissioner.

8 i) Meters shall be supplied by the council or the owner or the occupier of the premises as decided by the council, the meter shall be always under the lock and key of the officers and servants of the Council or sealed by them and shall ordinarily be read once in a month and maintained by them.

ii) Where a meter has already or is supplied by the Council, the owner or occupiers of the premises shall pay as meter rent and maintenance charges Rs. 4. 00 per month or part thereof per meter only during the period when the meter is in working order in the case of meters is supplied by the owner or occupier of the premise only a maintenance charges of Rs. 2. 00 per month or part thereof per meter shall be recoverable during the period when the meter is in working order.

7 (பி) ஜனப்புழக்கம் அதிகமில்லாத ஸ்தாபனங்களுக்கு மேற்கண்ட சலுகைகள் காட்ட மறுப்பதற்கு மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

7(சி) மேற்படி ஸ்தாபனங்களை நிர்வகிப்பவர்கள் அவைகளில் குழாய் போடுவதற்கும் அவைகளை பராமரிப்பதற்கும், குழாய்களை எடுப்பதற்கும் ஏற்படும் செலவை செலுத்துவதற்காக உடன் மேற்படி குழாய்கள் 15 மி.மீ ( அரை அங்குலம் ) உள்ளதாகவும் தண்ணீர் வீணாகாமல் தானே மூடிக்கொள்ளும் வகையினதாகவும் இருக்கவேண்டும். 30 மீட்டருக்கு ( 100 அடி ) குறைவாக இருந்தால் 15 மி.மீ. குழாயும் 90 மீட்டர் வரை ( 300 அடி ) இருந்தால் 20 மி.மீ. குழாயும் பதித்து இணைப்புக் கொடுக்கப்படும். குறைந்த பட்ச தேவை நேரங்களில் நிமிடங்களில் 5 லிட்டர்கள் தண்ணீர் கிடைக்குமாறு தண்ணீர் ஓட்டம் கட்டுப்படுத்தப்படும்.

7 (டி) விநியோகம் செய்யப்படும் தண்ணீர் வீணாக்கப் படுவதாகவோ முறை தவறி பயன் படுத்தப்படுவதாகவோ தெரிய வந்தால் மேற்கண்ட இணைப்பு நீக்கப்படும்.

7(இ) எப்பொழுதாவது குழாய்கள் ஒழுகி கொண்டிருந்தாலாவது அல்லது இயங்காதவாறு முறைதவறி கையாளப்பட்டதாலும், ஆணையரால் குழாய்கள் மூடி விடப்படும்.

8 (1) அளவுமானிகள் வீட்டின் சொந்தக்காரரால் அல்லது குடியிருப்பவரால் அல்லது நகராட்சி மன்றத்தால் அமைக்கப்படவேண்டும். அது எவரால் பொருத்தப் பட்டிருப்பினும் நகராட்சி அலுவலர்களால் பூட்டியோ முத்திரை வைக்கப்பட்டோ இருப்பதுமல்லாமல் அவர் களாலேயே சாதாரணமாக மாதம் 1 முறை கணக்கெடுக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வரும் .

(2) அளவுமானிகள் வீட்டுச் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பவரால் பொருத்தப்பட்டிருந்தால் அளவுமானிகள் சரியாக வேலை செய்துவரும் காலத்திற்கு மட்டும் பராமரிப்புச் செலவுக்காக மாதம் 1 க்கும் அதன் பகுதிக்கும் ரூ. 2.00 செலுத்தப்படவேண்டும். அளவு மானிகள் நகராட்சி மன்றத்தால் வழங்கப்பட்டால் மாதம் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கும் ரூ. 4.00 வசூலிக்கப்படும்.

Where a meter supplied by the owner or occupier of the premise goes out of order he or she shall arrange to have the meter repaired or renewed at his or her cost under the supervision of the Commissioner within two months from the date of the receipt of order from the Commissioner failing which the connection shall be cut off by the Commissioner. Repairs to meters supplied by the council shall be carried out at the cost of the council provided no damage is caused for the meter by breakings opening of seal lock or any tampering of the meter by the party etc., in such cases the owner or occupier shall replace by a new meter at his cost on pains of disconnection of service and for capture of all deposits of the individual with the Municipality.

Charges for water supplied during the above period when the meter is out of order or under repair shall be levied in the manner prescribed in bye-law No. 11 *infra*.

The charges for the water supplied shall be always payable in the Municipal Treasury with in 7 days after the demand is made Normally the meter reading will be taken by the staff of the local body and the demand shall ordinarily be made within the length of every quarter succeeding that to which the consumption related. Balance demand shall however not from ground for non payment of excess water charges any Quarter.

(i) If the amount under bye-law 9 (a) is not paid within the specified period, the Commissioner shall be liberty to cut off this service connection at any time 15 days after serving a notice of demand of such arrears on the owner or occupier of the premises and the Council or the Commissioner shall not be liable for any damages for such cutting off of service.

(ii) The payment for all water supplied under the terms and conditions laid down in these bye-laws if not paid by the party concerned within the stipulated time shall be recoverable in the same manner as property tax.

8. (3) வீட்டுக்காரர் அல்லது குடியிருப்புக்காரரால் பொருத்தப்பட்ட அளவு மானிகள் பழுதாகி விட்டால் ஆணையாளர் உத்திரவு கிடைத்த 2 மாதகாலத்திற்குள் வீட்டுக்காரர் அல்லது குடியிருப்புக்காரர் அவரது சொந்த செலவிலேயே ஆணையாளர் மேற்பார்வையில் மேற்படி பழுதை சரி செய்யவோ அல்லது அளவுமானியை மாற்றவோ ஏற்பாடு செய்ய வேண்டும். தவறினால் இணைப்பு துண்டிக்கப்படும். நகராட்சி மன்றத்தால் வழங்கப்படும் அளவுமானி வீட்டுச் சொந்தக்காரர் மற்றும் ஏனையோர்களால் உடைக்கவோ திறக்கவோ அல்லது முறைகேடாகவோ பயன்படுத்தப்படாமல் இருந்து பழுதுபட்டால் அவை நகராட்சியின் செலவிலேயே பழுதுபார்க்கப்படும். அவ்வாறு முறைகேடாக பயன்படுத்தப்பட்டிருப்பின் வீட்டுச் சொந்தக்காரர் அல்லது அனுபவிப்பவர் அவருடைய சொந்த செலவில் புதிய மீட்டர் பொருத்தவேண்டும். அத்துடன் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் நகராட்சியில் செலுத்தப் பட்டிருக்கும் அனைத்து காப்புத் தொகையும் பறிமுதல்செய்யப்படும்.

8. (4 ) மேற்படி அளவுமானி பழுதுற்ற காலத்திற்கான தண்ணீர் கட்டணம் உபவிதி 11 இல் சொல்லப்பட்டிருப்பதைப் போல விதிக்கப்படும்.

9 (எ) வழங்கப்படும் தண்ணீருக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தை அவ்வாறு செலுத்தும்படி கோரப்பட்ட ( டிமாண்டு பிறப்பிக்கப்பட்ட ) ஏழு ( 7 ) தினங்களுக்குள் நகராட்சி அலுவலகத்தில் செலுத்திவிடவேண்டும். சாதாரணமாக கேட்புத் தேவை ஒவ்வொரு காலாண்டில் 10 ஆம் தேதிக்குள் அனுப்பப்படும், கேட்புத் தொகை கேட்டும் கிடைக்கப் பெறவில்லை என்ற காரணத்தால் அதிகப்படி தண்ணீர் கட்டணம் செலுத்தவில்லை என்ற காரணம் ஒப்புக் கொள்ளப்படமாட்டாது .

பி (1) மேலே கண்ட 9 (எ) உட்பிரிவின்படி கட்டணத் தொகை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தத் தவறினால் ஆணையாளர் கட்டிடத்தின் சொந்தக்காரருக்காவது குடியிருப்புக்காரருக்காவது நோட்டீஸ் கொடுத்த 15 தினங்களுக்குப் பின் சப்ளையை நிறுத்தி விடலாம், அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு நகராட்சி சபையாவது, ஆணையாளராவது பொறுப்பாக மாட்டார்கள்.

(2) இந்த உபவிதிகளில் சொல்லப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் தண்ணீர் சப்ளை செய்யப்படுவதற்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை சம்பந்தப்பட்ட நபர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தத் தவறினால் சொத்து வரியை வசூலிப்பதற்கு கையாளப்படும் முறையில் வசூலிக்கத் தக்கதாகும்.

9. c) A sum of Rs. 500/- shall be charged for every re-connection incase the supply is cut off for non-payment of water charges provided that no service connection that has been disconnected for what so ever case shall reconnected unless all charges and other amounts due in respect of each service upto date of re-connection shall have been paid.

d) No remission for non use of water shall be granted for portion of a quarter. Remission may be granted by the Commissioner for non use of water if water for full quarters subjected to previous intimation of such non use with a request to close the water supply temporarily and subsequent demand for remission. The charges for such temporary disconnection and reconnection shall be at Rs. 250/- on each occasion.

**Note:** The word quarter occurring in the clause means "Three full calendar months"

10 (a) Complaints in writing as to incorrect readings or other defects in meter shall be made by the person affected with in one week from the date of taking such reading which is disputed and shall be accompanied by a deposit of Rs.250/-

(b) Complaints not made with in the said period or not accompanied by the requisite deposit shall not be entertained.

(c) The deposit amount of Rs.250/- shall be returned if on investigation the meter is found to have given incorrect readings or be otherwise defective, but will be forfeited if the meter is found to be correct. An error of 5% in either side will be ignored.

(சி) தண்ணீர் கட்டணம் செலுத்தத் தவறினால் இணைப்புத் துண்டிக்கப்பட்டுத் திரும்ப சப்ளை பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் திரும்ப இணைப்புக்காக ரூ. 500/– செலுத்தப்பட வேண்டும். எந்த காரணத்திற்காக இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தாலும் திரும்ப இணைப்பு கொடுக்கப்பட இருக்கும் நாள் வரை உள்ள தண்ணீர் கட்டணமும் இதர இது சம்மந்தப்பட்ட பாக்கித் தொகைகள் இருந்தால் அவைகளையும் செலுத்தினாலன்றி மறு இணைப்பு கொடுக்கப்படமாட்டாது.

(டி) குடிநீர் உபயோகப்படுத்தாததற்கு கால்வருடத்தின் பாகத்திற்கு கட்டணத்தில் தள்ளுபடி செய்ய முடியாது. தற்காலிகமாக குடிநீர் விநியோகத்தை நிறுத்த வேண்டும் என்றும் அதை உபயோகப்படுத்துவதில்லை என்றும் முன்னதாக தெரிவித்தும் மற்றும் பிறகு தள்ளுபடி கொடுக்க வேண்டும் என்று கேட்டால் இந்த நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு குடிநீர் உபயோகப்படுத்தாத முழு கால் ஆண்டுகளுக்கு மட்டுமே ஆணையாளர் அவர்கள் கட்டணத்தை தள்ளுபடி செய்துகொள்ளலாம். ஒவ்வொரு சமயத்திலும் தற்காலிகமாக குழாயை தடை செய்து நிறுத்துவதற்கும் மறு குழாய் இணைப்புக்கும் முறையே கட்டணம் ரூ. 250/– ஆகும்.

**குறிப்பு :–** கால்வருடம் என்பது மூன்று மாதங்கள் ஆகும். ஒவ்வொரு மாதமும் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்படும்.

10 (எ) அளவுமானியில் ஏற்படும் கோளாறுகள், அளவுகள், சரியாக எடுக்கப்படாததாக கொடுக்கப்படும் புகார்கள் அவ்விதம் ஆட்சேபிக்கப்படும் அளவு எடுத்த அளவுகளை எடுத்துச் சென்ற நாள் முதல் ஒரு வாரத்திற்குள் அவ்விதம் பாதிக்கப்பட்டவர் எழுத்து மூலமாக ரூ. 250/– முன் பணத்துடன் மனுச் செய்து கொள்ள வேண்டும்.

(பி) மேற்படி காலவரைக்குள் வராததும் அல்லது நிர்ணயிக்கப்படும் முன் பணம் செலுத்தப்படாததுமான புகார் மனுக்கள் கவனிக்கப்படமாட்டாது.

(சி) பரிசோதனைக்குப் பிறகு அளவுமானி கூடுதலாக தவறுதலாக அளவு காட்டுகிறது என்றோ அல்லது கோளாறு உடையதெனவோ தெரியவந்தால் ஷெ முன் பணம் ரூ. 250/– திருப்பி கொடுக்கப்படும். ஆனால் அளவுமானியில் யாதொரு தவறும் இல்லை என்று கண்டால் தொகையை நகராட்சி கணக்கில் வரவு வைத்துக் கொள்ளப்படும். இருதரப்பினரும், கூடுதலாகவோ, குறைவாகவோ 5% ( விழுக்காடு ) வரை தவறுகள் கவனிக்கப்படமாட்டாது.

11 In case where the meter is found to give incorrect readings or is out of order for any period exceeding one week the consumption recorded during the corresponding month or months of the previous year where such information is not available such available date as the Commissioner considers most suitable will be taken as the basis for the charges and the quantity of water so arrived at shall be deemed to be the quantity actually consumed. The decision of the Commissioner in the matter shall be final.

11 ) ஒரு வார காலத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு அளவுமானி பழுதடைந்து விட்டாலோ அல்லது தவறான குறிப்புகள் காட்டினாலோ சென்ற வருடத்தில் அந்த மாதத்தில் உபயோகப்படுத்தின தண்ணீரின் அளவை கொண்டு நடைமுறை வருடத்தின் இதே மாதத்தின் இவ்வளவு தண்ணீர் செலவாகி இருக்கும் என்ற முடிவு செய்து அளவு நிர்ணயிக்கப்படும் அல்லது அந்த மாதிரி கணக்குகள் தகவல் கிடைக்காவிடில் ஆணையாளர் அவர்கள் பொருத்தமாக தன்னிடம் உள்ள குறிப்புகளை கொண்டு எவ்வளவு தண்ணீர் செலவாகியிருந்தால் என்று கருதப்பட்டு நிர்ணயிக்கிறாரோ அதன்படி கட்டணம் செலுத்தக் கேட்புத் தொகை ( டிமாண்டு ) கொடுக்கப்படும். இதில் ஆணையாளர் அவர்களின் தீர்ப்பே முடிவானதாக கருதப்படும் ஆணையாளரால் துணை விதிகள் கீழ் பிறப்பிக்கப்படும் தண்டனை மற்றும் இதர அபராதங்கள் குறித்த விஷயங்களை மறு பரிசீலனைகள் வந்தால் மன்றத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

12. The Commissioner may direct any private latrine, Urinal or water closet which is supplied with water from the Municipal water works shall be provided within a cistern of such size and description as he may be decided.

12) தனிப்பட்ட கக்கூஸ்கள், மூத்திர பிறைகள் சுகாதார முறைப்படியான கக்கூஸ்கள் எவற்றிற்கும் தண்ணீர் சப்ளை செய்யப்படும் போது அதற்காக தனியாக ஆணையாளர் குறிப்பிடும் அளவின் படியும் முறையின்படியும் தொட்டி கட்டப்பட வேண்டும்.

13. Every steam boiler which requires water from municipal pipe supply shall be supplied from a cistern and not directly from the service pipe and every such cistern shall be supplied with a ball valve & a defective or warning pipe and proper means of access for inspection thereof.

13 ) நகராட்சி குடிநீர், கொதிநீர் தொட்டிக்கு ( Steam Boiler ) தேவையானால் அதை பிரத்தியேகமான முறையில் தொட்டிகள் மூலமாக வழங்கப்படும். ஆனால் வீட்டிற்கு வரும் குடிநீர் குழாய்களின் மூலம் நேரிடையாக வழங்கப்பட மாட்டாது. ஒவ்வொரு தொட்டியிலும் ஒரு 'பால் வால்வும்' எச்சரிக்கைக் குழாயும் பொருத்தப்பட்டு இருக்கும். அவற்றை பார்வையிடுவதற்கான வழிகளும் அமைக்கப்பட வேண்டும்.

14. (a) No tap of any house service connection shall be fixed or connected to a tub or cistern except in cases specified in bye-laws 12 and 13. No pump shall be errected to pump water to any over head tank or other places from such cisterns or service pipes.

14) (எ) உபவிதிகள் 12 மற்றும் 13இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளவைகள் தவிர வீடுகளிலுள்ள குழாய்களை தண்ணீர் சேகரித்து வைத்துக் கொள்வதற்காக கட்டிய தொட்டி முதலியவைகளுக்கு வைத்துக்கொள்ளவோ இணைத்துக்கொள்ளவோ கூடாது. தொட்டி அல்லது தண்ணீர் குழாயிலிருந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ தண்ணீரை எடுத்துச்செல்ல நீருந்து கருவி ( pump ) பொருத்தப்படக்கூடாது.

(b) The house owner or occupier shall not draw water from the Municipal pipe supply through any hose or movable pipe or other device attached to the tap in the service connection.

(பி) வீட்டுக்காரரோ குடியிருப்புக்காரரோ இணைப்பில் உள்ள குழாயில் ஹோஸ் பைப்போ அல்லது மோட்டார் வைத்தோ இதர முறைகளையோ பொருத்தி தண்ணீரை எடுக்கக்கூடாது.

15. The Executive Authority may at any time remove any pipe or fittings connected with any house service connection for the purpose of examining the conditions of or repairing of such fittings. If on such examination or otherwise it is found that the pipes or fittings are defective in any respect, the Commissioner may give notice to the owner or occupier of the premises to execute within a specified period or say One month at the most that the work necessary to remedy such defect may be carried out. If the work is not executed within the time specified in the notice or if the defect is likely to cause waste or contamination of water, the Commissioner may himself execute such work and recover the cost thereof from the owner or occupier or stop water supply to the premises by cutting off the connection. Further if on such examination it is found that there is unauthorised additions or alterations, or extentions of pipes, taps etc., the Commissioner may cut off the service connection after giving twenty four hours notice to the owner or occupier of the premises concerned.

15) எந்த ஒரு வீட்டு இணைப்பின் பைப்பையோ இதர அமைப்புகளையோ மராமத்து நிமித்தமோ அல்லது தன்மையை பரிசோதிப்பதற்காகவோ எந்த நேரமும் பிரிக்கலாம். அப்படி பரிசோதித்ததின் விளைவாக குறைகள் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த குறைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் அதிகபட்ச ஒரு மாத காலத்திற்கு ஷி குறைகளை நிவர்த்தி செய்யுமாறு வீட்டுக் காரருக்கு அல்லது குடியிருப்பவருக்கு ஆணையாளர் நோட்டீஸ் கொடுக்கலாம். அப்படி நோட்டீஸில் கொடுக்கப்பட்டுள்ள அவகாசத்தில் நிவர்த்தி வேலை செய்யப்படாவிட்டாலோ அல்லது தண்ணீர் சேதப்பட்டோ அல்லது கெட்டுப்போகக்கூடிய வாய்ப்பிருந்தாலோ ஆணையாளர் மேற்படி வேலையை செய்யலாம். அல்லது இணைப்பை துண்டிக்கலாம். மேலும் அவ்வாறான பரிசோதனையில் அனுமதி பெறாமல் செய்யப்பட்டுள்ள கூடுதல், மாறுதல்கள் பைப்பும் மற்றும் குழாய்கள் அதிகரிக்கப்பட்டிருத்தல் கண்டுபிடிக்கப்பட்டால் வீட்டுக்காரர் அல்லது குடியிருப்புதாரர்களுக்கு 24 மணி நேர நோட்டீஸ் கொடுத்து ஆணையாளர் இணைப்பை துண்டிக்கலாம்.

16. Every person to whom a house connection is or has been given by the Municipality shall maintain the house connection in good order and repair at his/her cost.

**16.** நகர சபையால் வழங்கப்பட்டிருக்கும் குழாயை ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரரோ அல்லது குடியிருப்பவரோ நல்ல நிலைமையில் பாதுகாத்து பராமரிப்பதுடன் தன் சொந்த செலவில் பழுது பார்த்துக் கொள்ள வேண்டும்.

17. Water from a house service connections given for domestic purpose and use shall not be utilised for non-domestic purpose without the specific permission of the Commissioner.

17. வீட்டுக்காரிய உபயோகங்களுக்காக வழங்கப்பட்டிருக்கும் தண்ணீரை ஆணையாளரின் தெளிவான அனுமதி இல்லாமல் வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்தக்கூடாது.

18. Except in the case of fire no person not duly authorised by the Commissioner in that behalf shall open or in anyway interfere with any mainline pipe or valve or fire plug connected with the Municipal Water Supply.

**18.** தீ விபத்து தவிர வேறெந்த காரணங்களானாலும் ஆணையாளர் அவர்களின் அங்கீகாரம் பெறாத எந்த நபரும் நகர சபை தண்ணீர் திட்டத்தைச் சேர்ந்த பிரதான குழாயையோ மற்றும் சாதாரண குழாயையோ அல்லது தானாகவே திறந்து மூடிக் கொள்ளும் தடுப்புகளையோ தீ அணைக்கும் இணைப்புகளையோ திறக்கவோ அல்லது மூடவோ அல்லது அகற்றவோ அல்லது எந்த விதத்திலும் தலையீடு செய்யவோகூடாது.

19. For every temporary connection for supply of water to a building during marriage or other occasions, charges shall be levied at the rate of Rs. 100/- per connection per day or part thereof in addition to sum of Rs. 250 /- which shall be levied for making and breaking the connection at the main. Every such connection shall be only a ( 1/2" ) 15mm tap and length of ( 10' ) 3 meters of ( 1/2" )15mm pipe at the end. All materials and all labour required for the purpose shall be supplied by the applicant for such connection.

19. திருமணம் அல்லது மற்ற விசேஷ காலங்களில் கட்டிடங்களுக்கு கொடுக்கப்படும் தற்காலிக குழாய் இணைப்பு ஒவ்வொன்றிற்கும் நாள் ஒன்றுக்கு அல்லது அதற்கு குறைவான கால அளவிற்கும் ரூ. 100/– கட்டணம் வசூலிக்கப்படும். மேலும் தற்காலிக குழாய் இணைப்பு கொடுக்கவும் எடுக்கவும் கட்டணம் ரூ. 250/–ம் வசூலிக்கப்படும். இக் குழாய் இணைப்பு கொடுக்க ( 1/2" ) 15 மி.மீ. திருகு குழாயும் இறுதி பாகத்தில் ( 10' ) 3 மீட்டர் நீளம் ( 1/2" ) 15 மி.மீ. விட்டமும் கொண்ட குழாய் தான் பயன்படுத்தப்படும். மேற்படி குழாய் இணைப்பு கொடுக்க தேவையான சாமான்களுக்கும் கூலியாட்களுக்கும் ஆகும் செலவை மேற்படி மனுதாரரே கொடுக்கவேண்டும்.

20. The council reserves to itself the right to cut off after giving twenty four hours notice any supply, granted for domestic or non-domestic purpose if in its opinion it is found that water is being misused or when there is found that water at the source in such case neither the Council nor the Commissioner shall be liable for damages.

20. வீட்டுக்காரியம் அல்லாத மற்ற காரியம் எதற்கும் கொடுக்கப்பட்ட இணைப்புகளில் தண்ணீர் துஷ்பிரயோகப் படுத்தப்பட்டதாக அபிப்ராயப்பட்டாலும் அல்லது நகரசபை தண்ணீர் திட்ட மூலாதாரத்தில் தண்ணீர் பஞ்ச நெருக்கடி உள்ளது எள்று நகர சபை கருதும் பட்சத்தில் 24 மணி நேர நோட்டீஸ் கொடுத்து இணைப்புகளை துண்டிக்க நகர சபைக்கு உரிமை உண்டு. இம்மாதிரி இனங்களில் நகரசபையோ ஆணையாளரோ எந்தவிதமான நஷ்ட ஈட்டிற்கும் பொறுப்பாளியாக மாட்டார்கள்.

21 (a) No person shall break the seal or lock on the meter or break the glass on the dial or open the meter or alter the index of any meter or prevent any meter from duly registering the quantity of water supplied (or).

21. (எ) யாதொரு நபரும் அளவுமானியில் உள்ள முத்திரையை அல்லது பூட்டை அல்லது அதன் முகப்பில் உள்ள கண்ணாடியை உடைக்கவோ அல்லது அளவுமானியை திறக்கவோ அல்லது அதில் அளவு காட்டும் முள்ளைத் திருத்தி மாற்றவோ அல்லது மேற்படி அளவு தடுக்கவோ சரியாக பதிவு செய்வதை வேறு எந்தவிதத்திலும் தடுக்கவோ கூடாது. ( அல்லது )

(b) Obstract or use water before or it has been registered by a meter set up for the purpose of measuring the same ( or )

(பி) தண்ணீர் அளப்பதற்கு அளவுமானி ( மீட்டர் ) வைப்பதற்கு முன்போ அல்லது அளவைப் பதிவு செய்வதற்கு முன்போ தண்ணீரை எடுக்கவாவது அல்லது உபயோகப்படுத்தவாவது கூடாது. ( அல்லது )

(c) Permit or cause the meter to be stolen or to be damaged so that the meter may not duly register the quantity of water supplied.

(சி) அளவுமானியை ( மீட்டர் ) திருடிக்கொண்டு போக அனுமதிக்கவோ அல்லது வழங்கப்பட்ட தண்ணீரின் அளவைக் காட்டாவண்ணம் அதை சேதப்படுத்தவோ கூடாது.

22. (a) All house service connections granted before these bye-laws have come into force shall be recognised as valid as though they have been granted under these bye-laws and all charges for water supplied in respect of those connection in confirmity with these bye-laws shall be borne by the owner or occupier of the premises concerned.

22. (எ) இந்த துணை விதிகள் அமுலுக்கு வருவதற்கு முன் பொருத்தப்பட்டிருக்கும் எல்லா வீட்டுக் குழாய்களும் இந்த துணைவிதிகளின் கீழ் கணக்கெடுக்கப்பட்டு உள்ளதாக கருதி சட்டப்படி கட்டுப்பட்டதாகும். மேலும் மேற்படி குழாய்களுக்கு தண்ணீர் வழங்கப்படுவதற்கான கட்டணங்களும் துணைவிதிகளுக்கு கட்டுப்பட்டதாக மேற்படி குழாய்களைக் கொண்டுவருவதற்கான செலவையும் கட்டிடத்தின் சொந்தக்காரரோ அல்லது குடியிருப்பவரோ ஏற்கவேண்டும்.

(b) The bye-laws on the subject hitherto inforce shall cease to operate from the date of coming into force of these bye-laws.

(பி) இந்த உபவிதிகள் அமலுக்கு வரும் தேதியிலிருந்து இதுவரை நடைமுறையிலிருந்த உபவிதிகள் செல்லுபடி ஆகாது.

(c) The Commissioner may direct that all or any part of said house service connections shall be brought into conformity with these bye-laws.

(சி ) வீட்டுக் குழாயின் ஒரு பாகத்தையோ அல்லது முழுவதையுமோ துணைவிதிகளுக்கு கட்டுப்பட்டதாக கொண்டு வர ஆணையாளர் உத்தரவிட அதிகாரமுண்டு.

23. These bye-laws shall be applicable to such institutions owned, controlled and managed by Government as may be determined by the Superintending Engineer, TWAD Board Circle, Madurai on merits of the each case.

23. இந்த உபவிதிகளில் அரசாங்க கட்டிடங்களுக்கு அதன் நிர்வாகத்திற்கு உட்படக்கூடிய கட்டிடங்களுக்கு மதுரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வை பொறியாளர் அவர்கள் ஒவ்வொரு கட்டிடத்தின் தகுதிக்கேற்ப நிர்ணயம் செய்கிறபடி பொருந்தும்.

24. Whoever commits a breach of any of the bye-laws and whoever having the care or custody of any child under seven years of age limit has failed to prevent such child from committing a breach of the above bye-laws shall be punishable.

(a) With the fine which may extend to Three Thousand Rupees ( Rs. 3000 ) and in case of a continuous breach a fine which may extend to fifteen rupees ( Rs.15/- ) for every day during which the breach continues after conviction for the first breach ( or )

(b) Water connection may cut off permanently if breach continuous after receipt or notice from the Municipal Authority to discontinue such breach.

Water connection for all Government Buildings within the Municipal limit to give priority to the above buildings as per Commissioner of Municipal Administration, Chennai, Letter No. 31977 / 2004 / WS 2, dated 01 / 10 / 2004.

Bodinayakanur. *Singed ...................,*
*Commissioner,*
*Bodinayakanur Municipality.*

24 ) இந்த உபவிதிகளில் எதையாவது மீறி நடப்பவர்கள் யாராக இருந்தாலும் அல்லது ஏழு வயதிற்குட்பட்ட குழந்தைகளுடைய பொறுப்பையும் பராமரிப்பையும் கொண்ட யாரேனும் அக்குழந்தை மேலே கண்ட உபவிதிகளில் எதையாவது மீறி நடப்பதை தடுக்க தவறினாலும் அடியிற்கண்ட தண்டனைக்கு உள்ளாவார்கள்.

(அ ) ரூ. 3000/– வரையில் அபராதமும் தொடர்ந்து மீறி நடப்பதாயிருந்தால் முதல் தண்டனைக்குப் பிறகும் மீறி நடக்கும் ஒவ்வொரு நாளைக்கும் ரூ. 15/– வரையிலும் அபராதம் விதிக்கப்படும்.

( அல்லது )

(ஆ) உபவிதிகளை மீறி நடப்பதை நிறுத்தும்படி ஆணையாளரிடமிருந்து அறிவிப்பு கிடைத்த பிறகு மீறி நடக்கும் பட்சத்தில் இணைப்பு நிரந்தரமாக துண்டிக்கப்படும்.

25 ) புதிய வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும்போது மனுதாரரது குடியிருப்பில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அவசியம் ஏற்படுத்தியிருக்க வேண்டும். இல்லையெனில் இணைப்பு வழங்கப்படமாட்டாது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 31977 / 2004 / குவ2, நாள் 1. 10. 2004 இன் படி நகராட்சிப்பகுதியில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், அரசுக் கட்டிடங்கள், அரசு மருத்துவமனை மற்றும் தீயணைப்புத்துறை ஆகிய இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படும்.

போடிநாயக்கனூர். ஒப்பம் ......................,
*ஆணையாளர்,*
*போடிநாயக்கனூர் நகராட்சி.*

## PART - II

## BODINAYAKANUR MUNICIPALITY BYE- LAWS

### PUBLIC FOUNTAINS

1. No person shall wilfully or negligently allow the water from a stand post, public water fountain or fire plug to run to waste.

## பகுதி – 2

## போடிநாயக்கனூர் நகராட்சி துணைவிதிகள்

### பொதுக்குழாய்

1. யாதொரு நபரும் குடிதண்ணீரை தற்காலிக குழாய் மூலமாகவோ அல்லது பொதுக்குழாய் மூலமாகவோ அல்லது தீ அணைக்க வைக்கப்பட்டு இருக்கும் பிரத்யேக குழாய் மூலமாகவோ வேண்டுமென்றோ அல்லது அசிரத்தையாகவோ குடிநீரை சேதம் செய்யக்கூடாது.

2. No person shall

2. யாதொரு நபரும்

a) Draw water from a public fountain except in a vessel with a capacity of not more than 30 litres

(or)

அ ) பொதுக் குழாய் மூலமாக 30 லிட்டர் அளவிற்கு மேற்படாத பாத்திரத்தைத் தவிர வேறு பெரிய பாத்திரங்கள் மூலமாக குடிநீர் எடுக்கக்கூடாது.

( அல்லது )

b) draw under water from a public fountain for any purpose other than domestic

( or )

ஆ) பொதுக்குழாய் மூலமாக வீட்டு உபயோகத்திற்கல்லாத மற்ற உபயோகங்களுக்காக குடிநீரை எடுக்கக்கூடாது.

( அல்லது )

c) Bath or wash clothes, utensils, vehicle and animals etc., at a public fountain or cattle trough

( or )

இ ) பொதுக் குழாய்களிலோ அல்லது கால்நடை தண்ணீர் தொட்டிகளிலோ, குளிக்கவோ, துணிகளைத் துவைக்கவோ பாத்திரங்களைக் கழுவவோ, வாகனங்களை, மிருகங்களை சுத்தம் செய்யவோ கூடாது.

( அல்லது )

d) draw water from a public fountain more than once, consecutively when others are waiting

ஈ ) குழாயடியில் வேறு நபர்கள் குடிநீருக்காக காத்து கொண்டிருக்கும் போது ஒருதடவைக்கு மேல் தொடர்ச்சியாக குடிநீர் எடுத்துக் கொண்டு இருக்கக்கூடாது.

3. No person shall enter into a cattle trough or water from any cattle trough, stand post or fire plug for any purpose what so ever except for extinguishing fire in case of accidents.

3 ) யாதொரு நபரும் தீயணைக்கும் உபயோகத்திற்கு தவிர வேறு எந்த உபயோகத்திற்காகவும் கால்நடை தண்ணீர் தொட்டிகளிலோ தற்காலிகமான குடிநீர் குழாய்களிலோ தீயணைப்பு இணைப்புகளிலோ பிரவேசிக்கவோ குடிநீர் எடுக்கவோ கூடாது.

4. No person shall manipulate a stand post or a public water fountain as to secure a continuous flow of water except for extinguishing fire during any accidents. The persons by whose action or for whose benefit or advantage a continuous flow was so manipulated for purpose other than extinguishing fire, shall be considered to have contravened this bye-law.

4 ) யாதொரு நபரும் பொது குடிநீர் குழாயையோ தற்காலிக குடிநீர் குழாயையோ குடிநீர் எப்போதும் தொடர்ச்சியாக வந்துகொண்டு இருக்கும்படியான வசதிக்காக திருப்பிவிடக்கூடாது. தீயணைக்கும் காரியம் தவிர மற்ற எந்த உபயோகத்திற்கும் அப்படி செய்யக்கூடாது. அவ்வாறு மீறி நடப்பவரும் அல்லது அத்தகைய நடத்தையால் பயனடைபவரும் இந்த உபவிதியை மீறினவர்களாக கருதப்படுவார்கள்.

5. No person suffering from any loathsome or contagious or infectious disease shall use any public fountain or a cattle trough or a fire plug.

5. அருவருக்கத்தக்க அல்லது தொற்றுநோய் இவைகளால் பீடிக்கப்பட்ட யாதொரு நபரும் எந்தப் பொது குடிநீர் குழாய்களையோ, கால்நடை தண்ணீர் தொட்டிகளையோ அல்லது தீயணைப்பு இணைப்புகளையோ உபயோகிக்கக் கூடாது.

6. No person shall take any animal which is suffering from any loathsome or contagious or infectious disease or any article which has been or which he has know or has reasons to know to have been exposed to any infection from any of the above disease to or near any public fountain or cattle trough or fire plug.

6. தொற்று அல்லது அருவருக்கத்தக்க இதர நோயால் பீடிக்கப்பட்ட கால்நடைகளையும், அசுத்தமான சாமான்களையும், தொற்றுநோய் பரவக்கூடிய பொருட்களையும், பொதுக்குடிநீர் குழாய்கள், தீ அணைக்கும் இணைப்புகள், கால்நடை தண்ணீர் தொட்டிகள் இவைகள் இருக்கும் இடத்திற்கு அல்லது அவைகளின் சமீபமாக யாதொரு நபரும் எடுத்துக்கொண்டு போகக்கூடாது.

7. No person shall commit any nuisance in and around a public fountain or cattle trough.

8. Except in the case of fire no person not duly authorised by the Commissioner in that behalf shall open or in any way interfere with any reservoir main or pipe or valves or fire plug or other fittings or cause damages to any stand post, public water tap or fire plug etc., connected with the Municipal Water Supply Scheme.

**PENALTY**

Whoever commits a breach of any of the bye-laws and whoever having the care of age limits to prevent such a child from commiting a breach or the above bye laws shall be punishable with fine which may extend to Fifty rupees ( Rs. 50 ) and in case of continuous breach with fine which may extend to Fifteen Rupees ( Rs.15/- ) for every day during which the breach continuous after a penalty has been levied, for the first breach.

Bodinayakanur,
11th July, 2006.

Singed .................,
*Commissioner,*
*Bodinayakanur Municipality.*

7. யாதொரு நபரும் பொது தண்ணீர் குழாய்க[illegible] கால் நடை தண்ணீர் தொட்டிகள் ஆகியவைகளின் அடியிலும் சுற்றுப்புறங்களிலும் எந்த விதமான அசுத்தங்களையும் அருவருப்பான செய்கைகளையும் செய்யக்கூடாது.

8. தீ பிடித்த காலத்தில் அல்லாமல் நகராட்சி குடிநீர் விநியோக குழாய் திட்டத்தில் சம்மந்தப்பட்ட நீர்த்தேக்கங்கள், நீர் நிலைகள், இணைப்புக்குழாய்கள், தீ அணைப்பு இணைப்புகள், தண்ணீர் திறப்புகள், குடிநீர் குழாய், தற்காலிகமான தண்ணீர் குழாய்கள் இவைகளில் எவையாகிலும் எந்த பாகங்களையாகிலும் நகராட்சி ஆணையர் அவர்களால் நியமிக்கப்பட்ட நபர்களைத்தவிர வேறு எந்த நபரும் உபயோகப்படுத்தவோ, பரிவர்த்தனை செய்யவோ திறக்கவோ சேதம் விளைவிக்கவோ மற்ற எந்த வகைகளிலும் பரிவர்த்தனை செய்யவோ கூடாது.

**தண்டனை**

மேலே கண்ட உபவிதிகளை மீறி நடக்கும் எந்த நபரும் 7 வயதிற்கு குறைந்த குழந்தைகளால் மேற்படி விதிகள் மீறப்பட்டு அதை தடுக்கத் தவறினால் அக்குழந்தை எவர் பராமரிப்பிலோ அல்லது பொறுப்பிலோ இருக்கிறதோ அந்த நபர் 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் படி ரூ. 50/– வரை அபராதம் விதிக்கப்படுவார். தொடர்ந்து செய்யப்படும் மீறுதலுக்கு முதல் தடவை அபராதம் விதிக்கப்பட்டதற்கு மீறப்படும் தினம் ஒன்றுக்கு ரூபாய் 15/– அபராதமும் விதிக்கப்படும்.

போடிநாயக்கனூர்,
2006 ஜூலை, 11 .

ஒப்பம் ......................
*நகராட்சி ஆணையாளர்,*
*போடிநாயக்கனூர் நகராட்சி.*

தமிழ் நாடு எழுதுபொருள் அச்சுத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரால் மதுரை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.